# ஒரு பவித்திரமான மனு

# 1

# தாய்மார்களுக்கு மனு!

என் சகோதரிகளே, நான் தாயாக இருப்பதினாலும், தங்களது தனிப்பட்ட தீய பழக்கத்தினால் பிள்ளைகளும் வாலிபரும் இந்த உலகத்திற்கும் வரப்போகிற உலகத்திற்கும் தங்களைக் கெடுத்துக்கொண்டிருப்பதைக் குறித்து எச்சரிப்படைந்ததினாலும், இதை உங்களுக்கு எழுதுவதற்காக நான் வருத்தப்படுகிறேன். சரீர, மன ஆவிக்குரிய காரியங்களின் வழியாக இந்த விஷயத்தை நாம் கருத்தாக பார்ப்போம்.

தாய்மார்களே, சரீர பெலத்தில் ஏற்படும் இத்தீமையின் விளைவுகளை நாம் முதலில் காண்போம். சுகத்தின் அழகும் தாங்கிக்கொள்ளும் பலமும் உங்கள் அன்பான பிள்ளைகளிடம் இல்லாதிருப்பதை நீங்கள் கவனித்தீர்களா? உங்களுடைய திறமையையும் மருத்துவருடைய திறமையையும் திணறடிக்கிற வியாதிகள் அவர்கள்மேல் வருவதைக்கண்டு நீங்கள் வருத்தமடைய வில்லையா? தலைவலி, நீர்கோப்பு, மயக்கம், பதட்டம், தோள்களிலும் பக்கங்களிலும் வலி, பசியின்மை, இடுப்பிலும் விரல்களிலும் வலி, தூக்கமற்ற இரவுகள், சோர்வான காலைநேரங்கள், உடற்பயிற்சிக்குப்பின் மிகச் சோர்வு ஆகிற புகார்களைக் கேள்விப்படுகிறீர்களா? ஆரோக்கியத்தின் அழகு மறைவதையும் வற்றிப்போன அல்லது இயற்கைக்கு மாறான வெளிறிய அல்லது சிவந்த முகத்தைப் பார்க்கும்போது இந்த சரீர அழிவின் காரணத்தை தீர ஆராயும்படி உந்தப்பட்டீர்களா? வாலிபருடைய திகைப்பூட்டும் இறப்புகளை கவனித்தீர்களா?

உங்கள் குழந்தைகளின் மன ஆரோக்கியத்திலும் குறைவு இருக்கிறதையும், அவர்களுடைய நடத்தை எல்லையைத் தெட்டிருப்பதைப் போலவும், அவர்கள் மனம் எங்கோ இருப்பதையும், அதைக்குறித்துப் பேசினால் அவர்கள் படபடப்பதையும் மிக இலகுவாக எரிச்சலடைவதையும் கவனித்தீர்களா? ஒரு வேலையைச் செய்யும்போது கற்பனையில் இருப்பதைப்போலவும், அவர்கள் மனம் வேறெங்கோ இருப்பதைப்போலவும், சுயநினைவிற்கு வரும்போது அது அதிக தவறுகளோடும் கவனமின்றி செய்யப்பட்டதாயும் இருப்பதால் தாங்கள்தான் அதைச் செய்தோம் என்று ஒப்புக்கொள்ள அவர்கள் விருப்பமற்றிருப்பதையும் கவனித்தீர்களா?

அவர்களுடைய மறதியைக்குறித்து நீங்கள் திகைப்படையவில்லையா? மிக எளிமையான அடிக்கடி கொடுக்கப்பட்ட வழிமுறைகளும் அடிக்கடி மறக்கப்படுகின்றன. மிக வேகமாக கற்றுக்கொள்ளுபவர்களாக இருந்தாலும் அது அவர்களுக்கு எவ்வித உபயோகமுமின்றி இருக்கலாம். மனம்அவைகளை தக்கவைப்பதில்லை. கடினமான படிப்பின் வழியான கற்பவைகளை உபயோகிக்கும்போது, சல்லடை போன்ற மனதினால் அவைகள் காணாமல் போய்விடுகின்றன. சுறுசுறுப்பலான வேலையில் ஈடுபாடு இல்லாதிருப்பதை கவனித்தீர்களா? மனதையும் சரீர பலத்தையும் ஈடுபடுத்தும் வேலைகளை விடாப்பிடியாகச் செய்துமுடிப்பதற்கு விருப்பமற்றிருப்பதை கவனித்தீர்களா? சோம்பலாக இருப்பதுவே அநேகருடைய போக்காக இருக்கிறது.

அவர்கள் முகத்திலிருக்கிற கனத்த வருத்தத்தையும், முன்பு மகிழ்ச்சியாகவும் தயவாகவும் பிரியமாகவும் இருந்த அவர்கள் இப்போது கவலையோடு இருப்பதையும் பார்த்தீர்களா? மிக இலகுவாக பொறாமைப்பட்டு, இருண்ட பக்கத்தையே பார்த்து, நீங்கள் அவர்களுடைய நன்மைக்காகப் பாடுபடும்போது, உங்களைத் தங்களுடைய சத்துருவாகவும் தேவையின்றி நீங்கள் அவர்களை கடிந்து கட்டுப்படுத்துவதாகவும் கற்பனை செய்கிறார்கள்.

உங்கள் பிள்ளைகளை சன்மார்க்க ரீதியாகப் பார்க்கும்போது இவையெல்லாம் எங்கு சென்று முடியும் என்று நீங்கள் யோசிக்கவில்லையா? குழந்தைகளில் கீழ்ப்படியாமை அதிகரித்திருப்பதையும், கட்டுப்படுத்தும் போது அவர்கள் நன்றியின்மையையும் பொறுமையின்மையையும் வெளிக்காட்டுவதையும் நீங்கள் கவனிக்கவில்லையா? பெற்றோர்களின் இதயங்களை கவலைக்குள்ளாக்கி, அவர்கள் தலையை விரைவாக நரைக்கச் செய்வதற்கேதுவாக, அவர்களுடைய அதிகாரத்தை பிள்ளைகள் அலட்சியப் படுத்துவதைக்குறித்து நீங்கள் எச்சரிப்படையவில்லையா? ஒருகாலத்தில் உங்கள் பிள்ளைகளிடம் நீங்கள் போற்றியிருந்த கபடற்ற தன்மை இப்போது குறைந்திருப்பதை காண்கிறீர்களா? சில பிள்ளைகள் தங்கள் முகத்திலே தவறான ஒரு கடினப்பார்வையைக் காண்பிக்கிறார்கள். மற்ற பாலினத்தோடு இருக்கவும், சிறிய வயதிலேயே அவர்களோடு ஒட்டிக்கொள்ளவும் உங்கள் பிள்ளைகளிடம் பலமாக வாஞ்சை இருக்கிறதைப்பார்த்து, உங்களுக்கு மனவேதனை உண்டாகவில்லையா? உங்கள் பெண் பிள்ளைகளின் உரையாடல்களின் மையம் ஆண்பிள்ளைகளாகவும், ஆண்பிள்ளைகளுக்கு பெண்பிள்ளைகளாகவும் இருக்கிறது. குறிப்பிட்ட ஒருவருக்கு அதிக முக்கியத்தை வெளிக்காட்டுகிறார்கள். உங்களுடைய அறிவுரைகளும் எச்சரிக்கைகளும் அவர்களில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவருவதில்லை. அறிவோடு நிதானிப்பதை கண்மூடித்தனமான

உணர்ச்சி மேற்கொள்ளுகிறது. வெளித்தோற்றத்தை கவனித்து, மாறுவதாக அவர்கள் சொன்ன வழிமுறைகளை நீங்கள் நம்பியிருந்தபோதும் உங்கள் வருத்துத்தற்கேதுவாக அங்கு ஒரு மாற்றமுமில்லை. அதோடு உங்களிடமிருந்து அதை மறைக்கவே செய்கிறார்கள். இன்னமும் இரகசிய தொடர்புகளும் சந்திப்புகளும்தான் இருக்கிறது. அநேகமாக காலத்திற்குமுந்தின அவர்களது திருமணத்தால் நீங்கள் திகைக்கும்வரை, அல்லது தங்களுடைய நேர்மையான நடக்கையால் உங்களுக்கு கனத்தையும் மரியாதையையும் கொண்டுவரவேண்டிய அவர்கள் அவமானத்தைக் கொண்டுவரும்வரை தங்களுக்கு விருப்பமான பாதையைத் தொடர்ந்து தங்கள் உணர்ச்சிகளால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். பருவத்திற்கு முந்தின திருமணங்கள் பெருகுகின்றன. கனியாத அன்புடனும் முதிராத நிதானங்களுடனும் உன்னதமான, நேர்மையான உணர்வுகளின்றியும் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் திருமண உறவுக்குள் நுழைந்து, குழந்தைத்தனமான உணர்ச்சிகளினால் நடத்தப்பட்டவர்களாக, திருமண உறுதிமொழியை எடுத்துக்கொள்ளுகிறார்கள். பாலகப்பருவத்திலிருந்து தங்களை கவனித்து பாதுகாத்துவந்த தங்கள் தாய்க்குத் தெரியாமல் தாங்களே தெரிந்தெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

குழந்தைப்பருவத்தில் உண்டாகும் பிணைப்புகள் பரிதாபமான இணைப்பிலோ அல்லது அவமானமான பிரிவிலோதான் பெரும்பாலும் முடிகிறது. பெற்றோர்களின் ஒப்புதல் இல்லாது உண்டாகும் இளம் இணைப்புகள் அபூர்வமாகவே மகிழ்ச்சியானவைகளாக இருக்கின்றன. சரியான வயதும் அனுபவமும் செயல்படுத்துவதை பலமுள்ளதாக ஆக்கும் காலம் வரும்வரை இளம் பாசங்கள் கட்டுப்படுத்தப்படவேண்டும். கட்டுப்படுத்தப்படாதவர்கள் மிக வருத்தமான வாழ்வை சுமக்கவேண்டிய ஆபத்தில் இருப்பார்கள். தன் வயதையொத்த ஒரு வாலிபரை, தன்னுடைய வாழ்க்கையின் துணைவராக இருப்பார் என்று நிதானிப்பதில் வாலிபர்கள் குறைவுள்ளவர்களே. அவர்களுடைய நிதானிப்பு முதிரும் போது, வாழ்நாள் முழுவதும் ஒருவரையொருவர் மகிழ்விக்கமுடியாத நபரோடு தாங்கள் கட்டப்பட்டிருப்பதைக் காண்கின்றனர். அப்போதும் தங்களுடைய தெரிந்துகொள்ளுதலை நேர்த்தியாக்குவதை விடுத்து, குற்றப்படுத்துதல் துவங்குகிறது. ஒருவரையொருவர் அலட்சியப்படுத்தி, அசட்டைபண்ணும் வரை பிளவு பெரிதாகிறது. இல்லம் என்கிற வார்த்தையில் அவர்களுக்கு எந்த புனிதமும் இல்லை. அன்பில்லலத வார்த்தைகளாலும் கடுப்பான நிந்தைகளாலும் இந்த சூழல் விஷமாகிறது. பெற்றோரைக் காட்டிலும் அதிகமாக அந்த அனுகூலமற்ற நிலையில் அவர்கள் பிள்ளைகள் வைக்கப்படுகிறார்கள். காலம் அனுமதிக்கும்பட்டத்தில் இப்படிப்பட்ட

சுற்றுப்புறத்தில் இப்படிப்பட்ட உதாரணங்களிலிருந்து, எப்படிப்பட்டதை எதிர்பார்க்கமுடியும்? தாய்மார்களே இப்படிப்பட்ட சரீர, மன, சன்மார்க்கத் தீமையின் காரணம் இந்த இரகசிய தீய பழக்கமே. இது உணர்ச்சிகளைத் தூண்டி, கற்பனைகளை கெடுத்து, விபசாரத்துக்கும் வேசித்தனத்திற்கும் வழிநடத்துகிறது. இந்தப் பழக்கம் அநேகருடைய சரீரத்தை பாழாக்கி, ஏறக்குறைய அனைத்து விளக்கங்களையும் உள்ளடக்குகிற வியாதிகளுக்கு அவர்களை ஆயத்தப்படுத்துகிறது. சுயத்தை அழிக்கும் மார்க்கத்தை பின்தொடர நம் பிள்ளைகளை அனுமதிக்கலாமா?

தாய்மார்களே, ஆவிக்குரியரீதியாக உங்கள் பிள்ளைகளை கண்ணோக்குங்கள். சரீரத்திலும் மனதிலும் உங்கள் பிள்ளைகள் பெலவீனமாயிருப்பதை காண்பது உங்களுக்கு வேதனையைத் தருகிறது. அதிலும் அவர்களை ஆவிக்குரிய காரியங்களுக்கு மரித்தவர்களாகவும், அதனால் நற்குணத்தின்மேலும் குண அழகின்மேலும் பரிசுத்த நோக்கங்களின் மேலும் வாஞ்சையற்றவர்களாகவும் பார்ப்பது அதிக வேதனையைத் தரவில்லையா? இரகசிய தீயபழக்கம் உன்னத தீர்க்கத்தையும், ஊக்கமாக முயற்சியையும், நல்ல மார்க்க குணத்தை உருவாக்கும் பலத்தையும் அழிக்கிறது. கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் அவருடைய சீடர்களாக, தங்கள் எல்லா உணர்ச்சிகளையும் சரீர பலத்தையும் மனத்திறன்களையும் அவருடைய சித்தத்திற்கு பரிபூரண இசைவாகக் கொண்டுவர கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதை கிறிஸ்தவனாயிருப்பதென்றால் என்ன என்கிற உண்மையை உணர்ந்திருக்கிற அனைவரும் அறிந்துகொள்ளட்டும். தங்கள் உணர்ச்சிகளால் ஆட்சிசெய்யப்படுபவர்கள் கிறிஸ்துவின் பின்னடியார்களா யிருக்கமுடியாது. தங்களுடைய கெட்ட பழக்கங்களை விடுத்து, கிறிஸ்துவின் சேவையை தெரிந்துகொள்ளக்கூடாதபடி தீமைக்கெல்லாம் ஊற்றான தங்களுடைய எஜமானனுக்கு அவர்கள் அதிகமாக அர்ப்பணித்திருக்கிறார்கள்.

எங்கள் பிள்ளைகள், அவர்களை இந்த வாழ்க்கையில் எந்த பொறுப்பிற்கும் தகுதியற்றவர்களாக்குகிற பழக்கங்களை தொடருவார்களோ என்றும், அழகையும், ஆரோக்கியத்தையும், அறிவையும், பரலோக நம்பிக்கையையும், பெற்றுக்கொள்ளத் தகுதியான கனத்தையும் இப்போதும் இனிமேலும் தியாகம் செய்துவிடுவார்களோ என்றும் தேவனுக்குப் பயந்த தாய்மார்கள் ஆழமான அக்கறையோடு விசாரிப்பார்கள். அப்படியல்லாது நமக்கு அன்பான நமது பிள்ளைகள் எச்சரிப்பின் சத்தத்துக்கு செவிசாய்த்து தூய்மையும் பரிசுத்தமுமான வழியை தெரிந்துகொள்ளுவார்களாக.

சுயக்கட்டுப்பாட்டையும், தங்களுடைய விருப்பத்தை நம்முடைய விருப்பத்துக்கு ஒப்படைக்கிறதையும் குழந்தைப்பருவத்திலிருந்து நம்

பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பது எத்தனை முக்கியம். தீய விளைவுகளை அறியாமல், தவறான பழக்கங்களை கற்றுக்கொண்டு அறிந்திருப்பார்களானால், இப்படிப்பட்ட பழக்கங்கள் சரீரத்தை கெடுத்து மனதையும் பாதிகும் என்று அறிவுறுத்துவதன் மூலம் அவர்களை உணர்த்தலாம். அவர்களுடைய பயத்தை அகற்றவும், இன்னும் அதிகமாக அந்த பழக்கத்தில் ஈடுபடுத்தவும் கெட்ட மனிதர்கள் என்ன வழிகளைக் கையாண்டாலும், எப்படி வேஷம்போட்டாலும் அவர்கள் தங்களுடைய எதிரிகளான பிசாசின் முகவர்களே என்பதை பிள்ளைகளுக்குக் காண்பிக்கவேண்டும். உண்மையும் சுத்தமும் மிக மதிப்பு வாய்ந்தது. இந்த விலையேறப்பெற்ற குணங்கள் பரலோகத்திலிருந்து உண்டாகிறது. இவை தேவனை நமது நண்பராக்கி, அவருடைய சிங்காசனத்துடன் நம்மை உறுதியாக இணைக்கிறது.

சாத்தான் வாலிபரின் மனங்களை கட்டுப்படுத்துகிறான். நாம் அவர்களைக் காப்பாற்ற உண்மையாகவும் தீர்மானத்தோடும் உழைக்க வேண்டும். மிகச்சிறிய பிள்ளைகள் இந்தப் பழக்கத்தை கொண்டிருக்கிறார்கள். அது காலஞ்செல்லச்செல்ல சரீர, மன திறன்களெல்லாம் கீழாகும்வரை அவர்களோடு வளர்ந்து பலப்படுகிறது. ஆரோக்கியத்தின் மேல் இந்தப் பழக்கம் செலுத்தும் செல்வாக்கைக்குறித்து கவனமாக எச்சரிக்கப்பட்டிருந்தால், அநேகர் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். தங்கள்மேல் அதிக வேதனையை வருவித்துக்கொண்டிருக்கிறோம் என்கிற உண்மையை அவர்கள் அறியாதிருந்தார்கள். இந்த தீமையில் பழக்கப்படும் குழந்தைகள், மற்றவர்களுக்கும் இதைக்குறித்து அறிவித்து, மிகச்சிறிய குழந்தைகளையும் இந்தப் பழக்கத்திற்குக் கொண்டுவரும்வரை பிசாசினால் பிடிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள்.

உங்கள் பிள்ளைகள் கீழான பழக்கங்களைக் கற்றுக்கொள்வதைத் தடுப்பதில் நீங்கள் மிக ஜாக்கிரதையாக இருக்கமுடியாது. கற்றுக்கொண்டபின் அதை ஒழிப்பதைவிட, தீமையிலிருந்து அவர்களை காத்துக்கொள்வது எளிது. உங்கள் வீட்டிற்கு வந்து, உங்கள் பிள்ளைகளோடு மாலைப்பொழுதையும் இரவையும் கழிக்கும்படி அயலகத்தார் தங்கள் பிள்ளைகளை அனுமதிக்கலாம். அப்பிள்ளைகளை திரும்ப வீட்டிற்கு அனுப்புவதன்மூலம் அயலகத்தாரை புண்படுத்தும் சோதனை உங்களுக்கு நேரிடலாம்; அல்லது உங்கள் பிள்ளைகளோடு தங்க அவர்களை அனுமதித்து வாழ்நாள் பரியந்தம் சாபமாக முடிகிற அழிவை பெற்றுக்கொள்ள உங்கள் பிள்ளைகளுக்கு வழிதிறக்கலாம்.

கெட்டுப்போவதிலிருந்து காப்பாற்ற நான் என் பிள்ளைகளை மற்ற ஆண்பிள்ளைகளுடன் ஒரே படுக்கையில் படுக்கவோ, அல்லது

ஒரே அறையில் இருக்கவோ அனுமதித்ததில்லை. பிரயாணங்களில் இருக்கும்போது, தேவைப்பட்டால், மற்றவர்களோடு படுப்பதற்குப்பதிலாக, தரையில் படுக்கும்படி, அரைகுறையான படுக்கையை அவர்களுக்கு விரித்துக் கொடுத்திருக்கிறேன். கரடுமுரடான பிள்ளைகளோடு பழகுவதை தடுக்க முயன்றிருக்கிறேன். கூடவே வீட்டு வேலைகளை மகிழ்ச்சியானதாக்கவும் சந்தோஷமானதாக்கவும் மாற்ற, தூண்டுவதற்கேதுவான பரிசுகளை அவர்கள்முன் வைத்திருக்கிறேன். அவர்கள் மனதையும் கைகளையும் ஆக்கிரமிக்கும்போது, தெருவிலே மற்ற ஆண்பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடவும், தெருக்கல்வியைப் பெற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு நேரமும் மனமும் இருப்பதில்லை.

நான் ஒன்பது வயதாயிருந்தபோது ஏற்பட்ட பெருந்துயர் என் ஆரோக்கியத்தை நாசப்படுத்தியது. இதை மிகப் பெரிய இடராகப் பார்த்து. இதினிமித்தம் முறுமுறுத்திருக்கிறேன். சில வருடங்களுக்குப்பின் இதை நான் வேறுவிதமாக, ஆசீர்வாதத்தின் வெளிச்சத்தில் பார்த்தேன். இப்போதும் அப்படியே கருதுகிறேன். சுகவீனத்தினிமித்தம் சமுதாயத்திலிருந்து விலக்கப் பட்டேன். அது வாலிபரின் இரகசிய தீயப் பழக்கத்தைக்குறித்த மகிழ்ச்சியான அறியாமையில் என்னை வைத்தது. தாயானபின்பு, தங்களை பூரணமாக நாசப்படுத்தியிருந்த சில பெண்களின் மரணப்படுக்கை அறிக்கையிலிருந்து இப்படிப்பட்ட தீயபழக்கம் இருக்கிறது என்பதை முதன்முறையாக அறிந்து கொண்டேன். என்றாலும் இன்னும் சில காலம்வரை இப்பழக்கத்தின் முழு பாதிப்பைக்குறித்தும், இதனால் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் பாதிப்பைக் குறித்தும் சரியான புரிந்துகொள்ளுதல் எனக்கு இல்லை.

பூப்பெய்தும் வயதுக்கு முன்பாகவே குழந்தைகள் இந்தப் பழக்கத்தில் ஓரளவுக்கு ஈடுபடுகிறார்கள். சரீரத்தில் அப்போது இதன் விளைவை பெரிய அளவில் அவர்கள் அனுபவிப்பதில்லை. ஆனால் ஆண்மையையும் பெண்மையையும் அடையும்போது, அந்த நெருக்கடியான நேரத்தில், முன்பு தன்னுடைய விதிகளை மீறியதன் பலனை இயற்கை அவர்களுக்கு உணர்த்துகிறது.

தன் மகளை சோர்வாகவும், உற்சாகமின்றியும், பலவீனமாகவும், எளிதில் எரிச்சலடைபவளாகவும், பேசும்போது சடிதியாக பதட்டமடை வதையும் காணும்போது, நல்ல தேகக்கட்டுடன் அவள் பெண்மைக்குள் நுழைய முடியாதோ என்றுகூட தாய் பயப்படுகிறாள். எனவே சுறுசுறுப்பான வேலையிலிருந்து அவளை விடுவித்து, வருத்தத்தோடு மருத்துவரை ஆலோசிக்கிறாள். அவர் தீர விசாரிக்காமல் மருந்துகளை கொடுக்கிறார் அல்லது மகளுடைய சுகவீனத்திற்கு எவைகள் காரணமாயிருக்கலாம்

என்பதை சந்தேகமேகொள்ளாத தாய்க்குச் சொல்வதில்லை. அநேக வாலிபரிடம் இப்படிப்பட்ட அதிகமான புகார்களுக்கு இரகசியமான தீய பழக்கமே காரணமாயிருக்கிறது. இந்தத் தீமை முக்கிய உயர்ந்த பலத்தை வீணாக்கி, சரீரத்தை பலவீனப்படுத்துகிறது. இப்படிப்பட்ட விளைவுகளை உண்டுபண்ணின இந்த பழக்கம் முறிக்கப்படாவிட்டால் முழுமையான நிவாரணம் கிடைக்காது. ஆரோக்கியமான உழைப்பிலிருந்து வாலிபர்களை விடுவிப்பதைப்போல மோசமான வழிமுறை பெற்றோர்களுக்கு வேறு இல்லை. அப்போது அவர்களுடைய வாழ்க்கை குறிக்கோளற்றதாகி, மனமும் கைகளும் உழைப்பின்றி, கற்பனையை உயிரடைந்து, சுத்தமும் ஆரோக்கியமுமற்ற நினைவுகளில் ஈடுபட சுதந்திரமாக விடப்படுகிறது. இந்த நிலையில் தங்கள் புகார்களுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கிற தீமையில் இன்னும் திளைக்க சுதந்திரம் பெறுகிறார்கள்.

தாய்மார்களே, உங்கள் பிள்ளைகளின் பழக்கங்களைக்குறித்த அறியாமையில் உங்களை வைத்திருப்பது குற்றமாகும். அவர்கள் சுத்தமுள்ள வர்களாயிருந்தால், அப்படியே காத்துக்கொள்ளுங்கள். அவர்களுடைய இளம் மனதை வேலியடைத்து ஆரோக்கியத்தையும் ஆத்துமாவையும் அழிக்கும் தீமையை வெறுக்க அதை ஆயத்தப் படுத்துங்கள். இளம் தோழர்களுடன் பழுகுவதால் மாசடையாதபடி உண்மையான தாய்மார்கள் செய்வதைப்போல அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இந்த யுகத்தின் கெடுக்கும் செல்வாக்குகளிலிருந்து அவர்களை விலையேறப்பெற்ற ஆபரணங்களாக காத்துக்கொள்ளுங்கள். வாலிபர்களுடன் அவர்களுக்கிருக்கிற உறவு நீங்கள் விரும்புகிறபடி இருக்க எந்நேரமும் அவர்களைக் கண்காணிக்கக்கூடாத சூழ்நிலையில் இருப்பீர்களானால், உங்கள் முன்பாக அவர்கள் உங்கள் பிள்ளைகளை சந்திக்கட்டும். எக்காரணத்திலும் அவர்கள் ஒரே படுக்கையில் படுக்கவோ அல்லது ஒரே அறையில்கூட இருக்கவோ அனுமதிக்கவேண்டாம்.

உங்கள் பிள்ளைகள் இந்தத் தீயபழக்கத்தைச் செய்கிறவர் களாயிருந்தால், உங்களை வஞ்சிக்கும்படி பொய்களுக்குத் திரும்பும் ஆபத்து அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் தாய்மார்களே நீங்கள் எளிதாக அமைதியாகிவிடக்கூடாது. உங்கள் விசாரணையை நிறுத்திவிடவும் கூடாது. பூரணமாக திருப்தியடையும்வரை இந்தக் காரியத்தை விட்டுவிடக்கூடாது. நீங்கள் நேசிக்கிறவர்களின் ஆரோக்கியமும் ஆத்துமாவும் ஆபத்தில் இருக்கிறது. இதுவே இக்காரியத்தை மிக முக்கியமானதாக்குகிறது. தவிர்க்கவும் மறைக்கவும் அவர்கள் முயற்சித்தாலும் தீர்மானமான கண்காணிப்பும், தீர விசாரிப்பும் உண்மையான நிலையை வெளிப்படுத்திவிடும். அப்போது தாய் இக்காரியத்தை அதனுடைய கீழான சிதைக்கும் தன்மையை உண்மையான வெளிச்சத்தில் உண்மையுடன் அவர்களுக்குக் காண்பிக்கவேண்டும்.

இந்த பாவத்தில் ஈடுபடுவது அவர்களுடைய சுயமரியாதையையும் குண மேன்மையையும் அழித்து, ஆரோக்கியத்தையும் நற்குணங்களையும் நாசப்படுத்தும் என்றும், அதன் மோசமான கறை தேவன் மேலிருக்கும் அன்பையும் பரிசுத்தத்தின் அழகையும் ஆத்துமாவிலிருந்து துடைத்துவிடும் என்றும் நம்பச் செய்ய முயலுங்கள். இப்பழக்கம் முடிவுக்கு வந்துவிட்டது என்று போதுமான சாட்சியங்களைப் பெறும்வரையும் தாய் இக்காரியத்தைத் தொடரவேண்டும்.

இந்த ஆபத்தான காலத்தில் அநேக தாய்மார்கள் பின்பற்றும் வழிமுறை, அவர்களுடைய பிள்ளைகளை காயப்படுத்துவதாக இருக்கிறது. அவர்களுடைய அழிவை உறுதிப்படுத்தும் வழியை அது ஆயத்தப் படுத்துகிறது. சில தாய்மார்கள் தங்கள் குமாரத்திகளை சும்மாயிருக்க அல்லது அதற்கும் கொஞ்சம் மேலாக, பின்னுவதிலும் குரோசே வேலையிலும் அல்லது எம்பிராய்டரியிலும் தங்கள் நேரத்தை செலவு செய்ய அனுமதித்து, அவர்கள் செய்யவேண்டிய வேலைகளுக்கு வேறு ஒரு பெண்ணை அமர்த்துவதின்வழியாக தங்கள் சொந்தக் கைகளாலேயே கதவைத் திறந்து, பிசாசை உள்ளே வரவேற்கின்றனர். தங்களுடைய இளம் நண்பர்களைச் சந்திக்கவும், தங்களுடைய சொந்த அறிமுகங்களை உண்டாக்கவும், எங்கு தங்களுக்குப் பிடித்தமானபடி செய்யமுடியுமோ அங்கு, பெற்றோரின் கண்காணிப்பிலிருந்து—வீட்டிலிருந்து சற்று தொலைவு செல்லவும்கூட விட்டுவிடுகின்றனர். இப்படிப்பட்ட அனைத்து சந்தர்ப்பங் களையும் சாத்தான் மேம்படுத்துகிறான். தன்னுடைய தந்திரமான கண்ணி களுக்கு, தாய் தான் அறியாமல் திறந்துவிட்டிருக்கிற இப்படிப்பட்ட பிள்ளை களின் மனங்களை அவன் பொறுப்பெடுத்துக்கொள்ளுகிறான். முப்பது வருடங்களுக்குமுன் இப்படிப்பட்ட காரியம் பாதுகாப்பாயிருந்ததால், இப்போதும் பாதுகாப்பானதுதான் என்பது இல்லை. இன்றைய நிலை முந்நாளின் நிலையை வைத்து நிதானிக்கப்படமுடியாது.

தாய்மார்கள் தங்கள் குமாரத்திகளை சமையலறைக்குள் அழைத்துச் சென்று, சமையல்துறையில் முழுமையான படிப்பினையைத் தரவேண்டும். போதுமான அளவு தைக்கவும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். துணிகளை எப்படி சிக்கனமாக வெட்டி, நேர்த்தியாக இணைப்பது என்பதை கற்றுத்தரவேண்டும். இந்தப் பிரச்சனையை கையிலெடுத்து, அனுபவமில்லாத மகளுக்கு பொறுமையாக கற்றுத்தருவதைவிட தாங்களே எல்லாவற்றையும் செய்ய அவர்கள் தெரிந்துகொள்ளுகிறார்கள். ஆனால் இப்படிச் செய்வதி னால் அத்தியாவசியமான கல்வி நெகிழப்படுகிறது. அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கெதிராக பெரும் தவறு செய்கிறார்கள். பிற்கால வாழ்க்கையில் இப்படிப்பட்ட காரியங்களில் அறிவு குறைவாயிருப்பதால் பிள்ளைகள்

அவமானப்படுகிறார்கள்.

வாழ்க்கையின் நியதிகளைக்குறித்து தாய்மார்கள் தங்கள் குமாரத்திகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். தங்களுடைய சொந்த சரீர அமைப்பைக்குறித்தும், புசிப்பதும் குடிப்பதும் மற்றும் அன்றாட பழக்கங்களைச் செய்வதும் ஆரோக்கியத்துடனும் நல்ல உடலமைப்புடனும் கொண்டிருக்கிற உறவுகளையும் குறித்தும் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இது இல்லாத அறிவியல் பயனற்றது.

குமாரத்திகளின் உதவி தாயின் வேலைகளில் பெரும் மாற்றத்தைக் உண்டாக்கும். இதனால் உதவியாளரின் செலவை சேமிக்கலாம். அதோடு குழந்தைகளுக்கு வேலை செய்ய் வழி செய்வதினால், சமுதாயத்திற்குள்ளும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற அன்பானவர்களுக்கு பொறுமையாக போதிக்கக் கடமைப்பட்டுள்ள தாயின் நேரடி செல்வாக்கிலும் அவர்களைக் கொண்டுவருவது அவர்களுக்கு தொடர்ந்து நன்மையாக இருக்கும். கூடவே வேலைக்கு அமர்த்தப்படும் பெண் குடும்பத்திற்குள் கொண்டுவரும் அநேக தீமைகளுக்கெதிரான கதவையும் அடைத்துவிடலாம். அந்த உதவிக்காரர்கள் சில நாட்களில் குடும்பத்திலுள்ள பிள்ளைகளின்மேல் பலமான செல்வாக்கை ஏற்படுத்தி, ஏமாற்றுவதிலும், தீய பழக்கங்களைச் செய்வதிலும் உங்கள் குமாரத்திகளைக் கொண்டுவந்துவிடலாம்.

மிக இளம் பருவத்திலிருந்தே உதவியாயிருக்கவும், பெற்றோரின் பாரங்களை பகிர்ந்துகொள்ளவும் குழந்தைகள் பயிற்றுவிக்கப்படவேண்டும். அப்டிச் செய்வதினால் தளர்ந்துபோன தாயின் விசாரத்தை இலகுவாக்கு வதில் அவர்கள் பெரும் ஆசீர்வாதமாக இருக்கலாம். குழந்கைள் சுறுசுறுப்பான வேலையில் ஈடுபடும்போது அவர்கள் கைகளுக்கு நேரம் மிச்சமிருக்காது. அவர்களுடைய நல்ல குணங்களைக் கெடுத்து, அப்பாவிப் பெண்குழந்தைகளின் வாழ்க்கை முழுவதையும் தாக்கும் தீய தொடர்புகளை உண்டுபண்ணும் வீணான, நன்கு பேசுகின்ற, தகுதியற்ற நண்பர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள குறைவான சந்தர்ப்பமே இருக்கும்.

சுறுசுறுப்பான வேலைகள் சாத்தானுடைய சோதனைகளை வரவேற்பதற்கும் நேரம் தராது. அவர்கள் களைப்படையலாம்; ஆனால் அது அவர்களைக் காயப்படுத்தாது. தூங்கும் மணிநேரங்களில் இயற்கையின் நியதிகள் மீறப்படாதபட்சத்தில் அது தன்னுடைய வீரியத்தையும் பெலத்தையும் புதுப்பித்துக்கொள்ளும். முழுமையாக சோர்வடைவதினால் இரகசிய பழக்கங்களில் ஈடுபடும் எண்ணமும் குறைவாகவே இருக்கும்.

தங்கள் குமாரத்திகளைக்குறித்த காரியத்தில் ஏமாந்துபோக

தாய்மார்கள் தங்களை அனுமதிக்கிறார்கள். வேலைசெய்ததால் அசதியாகவும் சுகவீனமாகவும் தோன்றினால், அவர்களை அதிக வேலை வாங்கிவிட்டதாக பயந்து, அதன்பின் அவர்களுடைய வேலையை இலகுவாக்கத் தீர்மானித்து விடுகிறார்கள். தங்கள் குமாரத்திகளால் செய்யப்படவேண்டிய அதிகப்படியான வேலையைத் தாய் சுமக்கிறாள். இக்காரியத்தில் உண்மையான நிலையை அறிவோமானால், அந்த கஷ்டத்திற்குக் காரணம் வேலைப்பளுவாக இருக்காது. மாறாக, அதிமுக்கிய பலத்தை வீணாக்கி, பெலவீனமான தளர்வை கொண்டுவருகிற தீய பழக்கங்களாக இருக்கும். இப்படிப்பட்ட நிலைகளில் தாய்மார்கள் சுறுசுறுப்பான வேலையிலிருந்து குமாரத்திகளை விடுதலைபண்ணும்போது, சும்மாயிருக்க அவர்களை விட்டுவிடுவதால் அவர்கள் இச்சையின் பீடத்தில் தகனிக்கும்படி தங்கள் பெலத்தை சேமிக்க வழிவகுக்கிறர்கள்; தடைகளை நீக்குகிறார்கள். நிச்சயமாகவே சுயத்தை அழிக்கும் வேலையில் தொடர, தவறான பாதையில் ஓட மனதுக்கு அதிக சுதந்திரம் தருகிறார்கள்.

நமது உலகத்தின் நிலை ஆபத்தானதாயிருக்கிறது. எப்பக்கம் பார்த்தாலும் அறிவாற்றலற்றவர்களையும், குறுகிப்போன உருவங்களையும், முடமான கை கால்களையும், கோணிப்போன தலைகளையும், அனைத்து விளக்கங்களிலுமான குறைபாடுகளையும் காண்கிறோம். பாவமும் குற்றமும், இயற்கையின் விதிகளை மீறுவதும்தான் சோகங்களுக்கும் மனித வேதனைகளுக்கும் காரணமான இருக்கிறது. இன்று இருக்கிற வாலிபரில் அதிக பங்கானோர் தகுதியில்லாதவர்களாயிருக்கின்றனர். கெட்ட பழக்கங்கள் அவர்கள் உயிர்சக்திகளை வீணாக்கி, வெறுக்கத்தக்க சிக்கலான வியாதிகளை அவர்கள்மேல் கொண்டுவந்துகொண்டிருக்கிறது. சந்தேகப்படாத பெற்றோர்கள், சாதாரணமாக ஆரோக்கிய இழப்பின் காரணத்தை அறிந்தாலும் மருந்துகளைக் குறிப்பிடுகிற மருத்துவர்களை ஒருவருக்குப்பின் ஒருவராக முயலுகிறார்கள். விசுவாசமிக்க மருத்துவராக, உண்மையான காரணத்தை வெளிக்காட்டுவதற்கு பதிலாக, காயப்படுத்தவோ அல்லது தங்கள் சம்பாத்தியத்தை இழக்கவோ பயந்து மருத்துவர்களும் மௌனமாயிருக்கிறார்கள். ஏற்கனவே தவறாக உபயோகப்படுத்தப்பட்ட இயற்கைக்கு, மேலும் போராடும்படியான பாரத்தை அம்மருந்துகள் உண்டாக்குகின்றன. இந்த போராட்டத்தில் இயற்கை அநேகமாக உடைந்து போகிறது. பாதிக்கப்பட்டவர் மரிக்கிறார். இதன் மிக இரகசியமான பகுதி, இயற்கை மீறப்பட்ட தன் விதிகளுக்கு எதிராக தன்னால் முடிந்தவரை போராடியது என்றிருக்க, நண்பர்களோ இம்மரணத்தை தேவனுடைய இரகசிய ஆட்சிமுறை என்று பார்க்கிறார்கள். சுகமும், அறிவும், வாழ்க்கையும் கீழ்த்தரமான இச்சைக்கு பலியாக்கப்பட்டது.

பூப்பெய்துமுன்போ அல்லது ஆண்மையையும் பெண்மையையும் அடையுமுன்போ சுயத்தைக் கெடுக்கும் பழக்கத்தை உடையவர்கள் நெருக்கடியான அந்த நேரத்தில் இயற்கையின் விதிகளை மீறினதன் பலனை ஈடுகட்ட வேண்டும். அநேகர் சீக்கிரமாகவே கல்லறைக்குட்படுகின்றனர். மற்றவர்களுக்கு போதுமான பலம் இருப்பதினால் இந்தச் சோதனையைத் தாண்டுகின்றனர். பதினைந்து வயதிலிருந்தும் அதற்குப்பின்னும் இந்தப் பழக்கம் தொடருமானால், தன்னை தவறாக உபயோகித்தால் பாதிக்கப்பட்ட பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற இயற்கை, தன் எதிர்ப்பை வெளிக்காட்டும். விசேஷமாக முப்பதிலிருந்து நாற்பத்து ஐந்து வயதிற்குள், சரீரத்தின் அநேக இடங்களில் வலிகளாலும், வெவ்வேறு வியாதிகளாலும், கல்லீரல், நுரையீரல் பாதிப்புகளாலும், நரம்பு, வாதநோய் வலிகளாலும் முதுகெலும்பு பாதிப்புகளாலும் சிறுநீரகம் செயலிழப்பதாலும் மற்றும் புற்றுநோய்க் கட்டிகளாலும் அது தன்னுடைய பிரமாணங்களை மீறியதற்கான தண்டனையை தர வழிவகுக்கும். இயற்கையின் நேர்த்தியான சில அமைப்புகள், கடினமாக வேலைகளை மற்ற அமைப்புகள் செய்யும்படி விலகிக்கொள்ளுகிறது. இது இயற்கையின் நேர்த்தியான அமைப்புமுறையை ஒழுங்கற்றதாக்க, சரீரம் சடிதியாக உடைகிறது. விளைவு மரணமே.

தாய்மார்களே, செய்வதற்குப் போதுமானவற்றை உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். அவர்கள் அசந்துபோனாலும் அதனால் காயப்படார்கள். அசதிக்கும் சோர்வுக்கும் வேறுபாடு உண்டு. சோம்பல், சரீர, மன, சன்மார்க்க ஆரோக்கியத்திற்கு ஏற்றதல்ல. அது கதவைத் திறந்து சாத்தானை உள்ளே வரவேற்கும். அந்த சந்தர்ப்பங்களை அவன் மேம்படுத்தி, வாலிபர்களைத் தன் கண்ணியில் இழுத்துக்கொள்ளுவான். சோம்பலாயிருப்பதினால் சன்மார்க்கம் பலமிழந்து, உணர்ச்சிகளின் வலிமை உயர்வது மாத்திரமல்ல, சாத்தானின் தூதர்கள் மனதின் தலைமைபீடத்தை ஆக்கிரமித்து, மனசாட்சி மிருக உணர்ச்சிகளுக்கு இமங்கொடுக்கும்படி அதை பலவந்தமும் பண்ணுகிறார்கள். பொறுமையாக உழைக்க நம் பிள்ளைகளுக்கு நாம் கற்றுக்கொடுக்கவேண்டும். அவர்களை வேலைப் பழுவிற்குள் விடாதிருக்கவும் கவனமாயிருக்கவேண்டும். தங்கள் வேலையில் கஷ்டங்களை சந்திப்பார்களானால், மேன்மேலும் அவர்கள்மேல் அதை சுமத்துவதற்குப்பதிலாக உதவிக்கரம் கொடுக்கவேண்டும். அப்போதைக்கு அவர்கள்மேலேயே அதைச் சுமத்துவது நமக்கு இலகுவாக இருக்கலாம். ஆனால் தன்னைச்சார்ந்து செய்யும் உபயோகமான மதிப்புள்ள பாடத்தைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கத் தவறும்போது, கடைசியில் நம் கவலைகளை அதிகமாக கூட்டிக்கொள்ளவே வழியை ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறோம். நம் பிள்ளைகளிடம் தாராளத்தையும் நேர்மையான

கொள்ளைகளையும் எழுப்பிவிட்டு, சுறுசுறுப்பான வேலைக்கு அவர்களை அழைக்கவேண்டும். அது அநேக சோதனைகளிலிருந்து அவர்களை பாதுகாத்து, அவர்களுடைய வாழ்க்கையை மகிழ்ச்சியானதாக்கும்.

என் சகோதரியே, நம் பிள்ளைகளுடைய சரீர, மன, சன்மார்க்க சுகத்திற்கு தாய்மார்களாக நாமே அதிக பொறுப்பாளிகளாயிருக்கிறோம். வாழ்க்கையின் சரியான பழக்கங்களை அவர்களுக்குக் கற்றுத்தருவதன்மூலம் நாம் அதிகம் செய்யலாம். உதாரணமான நம் வாழ்க்கைவழியாக, ஆரோக்கியத்தை நாம் முக்கியப்படுத்துவதையும், அதன் நியதிகளை அவர்கள் மீறக்கூடாது என்பதையும் நாம் காண்பிக்கமுடியும், நம் பிள்ளைகளின் ஆரோக்கியத்தை பாதிக்கும் ஆகாரங்களை மேசையின்மீது வைப்பதை நாம் பழக்கப்படுத்தக்கூடாது. வாசனைப் பொருட்கள் இல்லாமல் நம் உணவு ஆயத்தப்படுத்தப்படவேண்டும். கேக்குகள், பத்திரப்படுத்தப்பட்டவைகள் தாளிக்கப்பட்ட இறைச்சிவகைகள் அதோடு சேர்ந்த குழம்புகள் போன்றவை சரீரத்தில் சுகமற்ற நிலையை உண்டுபண்ணி, மிருக உணர்ச்சிகளை தூண்டிவிடும். சுயத்தை மறுக்கும் பழக்கங்களை பழகிக்கொள்ள நம் பிள்ளைகளுக்குக் கற்றுத்தரவேண்டும். வாழ்கையின் மிகப்பெரிய போராட்டம் சுயத்தோடு, அதாவது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, மத மற்றும் சன்மார்க்க திறன்களுக்குகீழ் அவைகளை கொண்டுவருவதில் இருக்கிறது என்பதை கற்றுத்தரவேண்டும்.

என் சகோதரிகளே, தேவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பலத்தை மேன்மையான காரியங்களில் உபயோகிப்பதற்கேதுவாக, சோர்வடையச் செய்து பசியை சோதிக்கிற ஆகாரங்களை ஆயத்தம் பண்ணுவதில் அடுப்படியில் குறைந்த நேரமே செலவுசெய்வோம் என்று உறுதியாக தீர்மானியுங்கள். எளிய, ஊட்டமளிக்கிற ஆகாரத்தை ஆயத்தப்படுத்த அதிக வேலை அவசியப்படாது. நம் பிள்ளைகளை கர்த்தரிலும் நல்ல அறிவுரையிலும் போஷாக்கிலும் வளர்க்க போதுமான ஞானத்தைக் கேட்டு தாழ்மையான ஊக்கமான ஜெபத்தை தேவனிடம் ஏறெடுக்கவே அதிக நேரம் செலவுசெய்ய வேண்டும்.

மனதின் ஆரோக்கியம், சரீர ஆரோக்கியத்தைச் சார்ந்து இருக்கிறது. கிறிஸ்தவ பெற்றோர்களாக, வாழ்க்கையின் நியதிகளுக்கு இசைவாக நம் பிள்ளைகளை பயிற்றுவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். நான் உண்பதற்காக பிழைக்கவில்லை; மாறாக பிழைப்பதற்காக உண்கிறோம் என்பதை கட்டளையாலும் வாழ்க்கையாலும் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும். மனதில் நேர்மையாகவும் குணத்தில் சுத்தமாகவும் உண்மையாகவும் இருக்க நம் பிள்ளைகளை உற்சாகப்படுத்தவேண்டும். சன்மார்க்க

அறிவையும் ஆவிக்குரிய காரியங்களின்மேல் வாஞ்சையையும் அவர்களிடம் பலப்படுத்த, நாம் நமது வாழ்க்கை முறையை சீராக்கி, மிருக உணவுகளை அப்புறப்படுத்தி, தானியங்களையும் பழங்களையும் உணவுப்பொருளாக உபயோகிக்கவேண்டும்.

தாய்மார்களே, செய்யும்படியான வேலை உங்களுக்கு உங்கள் குடும்பங்களில் இல்லையா? ஏற்கனவே இருந்துகொண்டிருக்கிற தீமைகளை எப்படி நிவிர்த்திசெய்வது என்று நீங்கள் கேட்கலாம். எப்படி இந்த வேலையை துவங்குவது? உங்களுக்கு ஞானமில்லையென்றால் தேவனிடம் செல்லுங்கள். சம்பூரணமாகக் கொடுப்பதாக அவர் வாக்குக் கொடுத்திருக்கிறார். தெய்வீக உதவிக்காக அதிக ஊக்கமாக ஜெபியுங்கள். எல்லாரிடமும் ஒரே வழிமுறை சரியாக இருக்காது. பரிசுத்தமான நிதானிப்பை செயல்படுத்தவேண்டியது இப்போது அவசியம். அவசரமாகவோ, குழப்பத்துடனேயோ உங்கள் பிள்ளைகளை கண்டிக்க வேண்டாம். அப்படிச் செய்வது அவர்களிடம் கலகத்தையே உண்டாக்கும். நீங்கள் கையாண்ட தவறான வழிமுறை தன்னுடைய சோதனைகளுக்குள் உங்கள் பிள்ளைகளை நடத்திச்செல்ல சாத்தானுக்கு வழிதிறந்து விட்டிருக்குமானால், அதற்காக நீங்கள் ஆழமாக வருத்தப்படவேண்டும். ஆரோக்கிய விதிகளை மீறுவதைக்குறித்து நீங்கள் அவர்களுக்குப் போதிக்காதிருந்தால், உங்கள் மேல்தான் பழி இருக்கும். முக்கியமாக கடமையை நீங்கள் புறக்கணித்திருக்கிறீர்கள். அதன் பலன் உங்கள் பிள்ளைகளின் தவறான பழக்கங்களில் தெரிகிறது. சுயத்தைக் கட்டுப்படுத்த உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுத்தருமுன் நீங்கள் உங்களுக்கென்று அதைக் கற்றுக்கொள்ளவேண்டும். நீங்கள் இலகுவாக கலக்கமுடையவராகவோ அல்லது பொறுமையற்றவராகவோ இருப்பீர்களானால், தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது எப்படி நியாயமாகும்? நீங்கள் அமைதியாகவும், மிக பரிதாப உணர்வுகளோடும், இரக்கத்தோடும் தவறு செய்யும் உங்கள் பிள்ளைகளை அணுகி, தொடர்ந்து இந்தப் பழக்கத்தில் ஈடுபடுவார்களானால், நிச்சயமாக தங்கள் சரீரங்களை அழிவின் வேலையில் ஈடுபடுத்துகிறார்கள் என்றும், அதனால் அவர்களுடைய சரீரமும் மனமும் சன்மார்க்கமும் அழிவை காணவேண்டியிருக்கும் என்றும், அவர்கள் தங்களுக்கெதிராக மட்டுமின்றி தேவனுக்கு எதிராகவும் பாவஞ்செய்கிறார்கள் என்றும் உண்மையாகக் கூறவேண்டும். கூடுமானால், தேவனுக்கு விரோதமாக பரிசுத்தமான வேதனுக்கு விரோதமாகவே அவர்கள் பாவஞ்செய்து கொண்டிருக்கிறார்களென்பதையும் அதினிமித்தம் இருதயங்களை சோதித்தறிகிறவர் அவர்கள் நடக்கையில் விருப்பமாயில்லை என்பதையும், அவர் பார்வைக்கு எதுவும் மறைவாயில்லை என்பதையும் அவர்கள்

உணர்ந்துகொள்ளச் செய்யவேண்டும். இவ்வாறு மனந்திரும்ப உங்கள் பிள்ளைகளுக்குப்போதித்தால், தேவன் ஏற்றுக்கொள்ளும்படியாக மனந்திரும்பி, இரட்சிப்புக்கு ஏதுவாக, பின்னர் வருத்தப்படுவதற்கேதுவில்லாதவிதமாக மனந்திரும்புவார்கள். மறுமலர்ச்சி நிச்சயம் உண்டாகும். தங்கள் பாவங்கள் தெரியவந்ததினிமித்தம் வருத்தப்படாமல், தங்கள் பழக்கங்களின் மோசப்படுத்தும் தன்மையைப் பார்த்து, அவைகள் அனைத்தையும் தேவனிடம் அறிக்கை செய்து விட்டுவிடுவார்கள். தேவனுக்குப் பிரியமில்லாமல் நடந்து, அவருக்கு எதிராக பாவஞ்செய்து, தங்களை உண்டாக்கினவருக்குமுன்— புத்தியுள்ள ஆராதனையாக தங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டியவருக்குமுன், அதை களங்கப்படுத்தினதினிமித்தம் துக்கப்படுவார்கள்.

“உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்”– 1 கொரிந்தியர் 6:19,20.

இரக்கமுள்ள தேவன் மனதிலிருந்து வரும் உண்மையான மனந்திரும்புதலை ஏற்றுக்கொண்டு, சரீரத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் சுத்தம் செய்வதற்கேதுவாக அவர்கள் எடுக்கும் முயற்சியை ஆசீர்வதிப்பார் என்று உங்கள் பிள்ளைகளை ஊக்கப்படுத்தவேண்டும். உங்கள் பிள்ளைகளின் மனதின்மேலிருந்த கட்டுப்பாட்டை இழப்பைக் காணும் சாத்தான் இந்த கொள்ளை கொண்டுபோகும் தீமையை பழக்கப்படுத்துவதற்கேதுவாக பலமாக அவர்களை சோதிப்பான். ஆனால் இது தேவனுக்கு விரோதமான பகையாக இருப்பதால், உறுதியான தீர்மானத்தோடு, மிருக உணர்ச்சியில் ஈடுபட சாத்தான் அனுப்பும் சோதனைகளை அவர்கள் எதிர்க்கவேண்டும். சாத்தான் கட்டுப்படுத்தும் உரிமையை கோருவதற்கேதுவான மறுக்கப்பட்ட பாதையில் நுழையக்கூடாது. சுத்தமான நினைவுக்காகவும் சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்தமான சிந்தனைக்காகவும் தாழ்மையோடு தேவனிடம் மன்றாடினால், அவர் செவிகொடுப்பார். விண்ணப்பத்தை அருளிச்செய்வார். எவரும் தங்கள் பாவங்களிலே அழிந்துவிடும்படி தேவன் விடுவதில்லை. மாறாக, தங்கள் விசுவாசத்தை அவர்மீது வைக்கும்போது, பெலவீனமான உதவியற்றவர்களுக்கு அவர் உதவுவார். இரகசிய தீமையில் ஈடுபட்டு தங்கள் சரீர மற்றும் மனபலங்களை இழந்துபோனவர்கள், இயற்கையின் நியதிகளை மீறினதற்கான பலனிலிருந்து முற்றிலும் மீண்டுவர முடியாது என்றாலும் இந்த உலகிலும் இனிவரும் உலகிலும் அவர்களுடைய இரட்சிப்பு

அவர்களுடைய முழுமையான மாற்றத்தைச் சார்ந்து இருக்கிறது. இதிலிருந்து விலகுவது ஒவ்வொன்றும் மீண்டுவருவதை நம்பிக்கையற்றதாக்குகிறது. இந்தப் பழக்கத்தை முறித்து கொஞ்சகாலம் ஆனபின்பும் ஆரோக்கியத்தில் எவ்வித குறிப்பிட்ட முன்னேற்றமும் ஏற்படவில்லையென்று எவரும் அதைரியமடையவேண்டியதில்லை. இயற்கையின் நியதிகள் அதிககாலம் மீறப்படாமல் இருந்திருந்தால், உடனே உணரப்படாதிருந்தாலும் அது தனது மீட்பின் வேலையை செய்யும். ஆனால் சிலர் இயற்கையை அதிகக் காலம் தவறாக நடத்தினதால் முழுமையாக மீண்டுவரமுடியாதுபோகலாம். அப்படிப்பட்டவர்கள் வாழ்நாள் முழுவதும் தங்கள் செய்கையின் பலனை அதிகமாகவோ குறைவாகவோ அறுக்கவேண்டும்.

பெலவீனமாயிருக்கிற வாலிபர் அனைவரையும் தவறான பழக்கங்களைக்குறித்த குற்ற உணர்வோடு இருக்கிறதாக நாங்கள் சொல்லவில்லை. சுத்த மனதும் மனசாட்சியும் உள்ளவர்களாயிருந்தும் தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில காரணங்களால் வேதனைப்படுகிறவர்கள் இருக்கிறார்கள்.

விஷப்பழக்கங்களுக்கு எதிரான நமது பிள்ளைகளின் ஒரே பாதுகாப்பு கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட வழிதேடுவதிலும், மெய்யான மேய்ப்பரின் கவனத்திற்குள் தன்னை வைப்பதிலுந்தான் இருக்கிறது. அவருடைய சத்தத்தை அவர்கள் கேட்பார்களானால், அவர் அவர்களை ஒவ்வொரு தீமையிலிருந்தும் காப்பாற்றி, அனைத்து ஆபத்துகளிலிருந்தும் மறைத்துக்கொள்ளுவார். “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; … அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது” என்று அவர் சொல்லுகிறார். கிறிஸ்துவில் அவர்கள் நல்ல மேய்ச்சலைக் கண்டடைந்து, பெலத்தையும் நம்பிக்கையையும் பெறுவார்கள்; மனதை திசைதிருப்பி, இருதயத்தை திருப்பக்கூடிய எதற்காகவும் இளைப்பின்றி ஏங்கி வேதனைப்படமாட்டர்கள். விலைமதிப்புள்ள முத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் மனது சமாதானமாக அமர்ந்திருக்கிறது. அவர்களுடைய மகிழ்ச்சியெல்லாம் சுத்தமான, உயர்ந்த பரலோக குணத்திலிருக்கும். வேதனையும் வருத்தமுமான நினைவுகளை அவர்கள் பின்வைப்பதில்லை. இப்படிப்பட்ட மகிழ்ச்சிகள் சரீரத்தை பெலவீனப்படுத்தி, மனதை கீழ்த்தரமாக்காது. மாறாக, இரண்டிற்கும் ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கும்.

தேவனோடு கொள்ளும் தோழமையும், அவர்மேல் வைக்கும் அன்பும், பரிசுத்தத்தை பழக்கப்படுத்துவதும், பாவத்தை அழிப்பதுமான இவைகளெல்லாம் மகிழ்ச்சியானவைகள். தேவனுடைய வார்த்தைகளை வாசிப்பது கதை புத்தகங்களைப்போல கற்பனைகளை வசீகரித்து,

உணர்ச்சிகளை எரியூட்டாது. மாறாக, மனதை மென்மையாக்கி, இனிமையாக்கி, உயர்த்தி, பரிசுத்தப்படுத்தும். வாலிபர்கள் தொல்லைகளுக்குட்பட்டு, வலிய சோதனைகளால் அலைகழிக்கப்படும்போது, ஜெயிக்கிற சிறப்பான வல்லமையைப் பெற்றிருக்கிறார்கள். என்ன உயர்ந்த உரிமை! தூசியும் சாம்பலுமான முடிவுள்ளவர்கள், கிறிஸ்துவின் மத்தியஸ்தத்தினால் தேவனுடன் புனிதமான நெருக்கத்துக்குள் கொண்டுவரப்பட்டு, அறிவிலும் உண்மையான பரிசுத்தத்திலும் புதுப்பிக்கப்பட்டு, சத்துருவின் தாக்குதல்களுக்கெதிராக பலப்படுத்தப்படுகிறார்கள்.

உத்தியோகம் எவ்வளவு உயர்வானதாக இருந்தாலும், மாம்ச இச்சைகளை திருப்திப்படுத்த நாடும் மனிதர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கமுடியாது. கிறிஸ்துவின் ஊழியக்காரராக அவர்களது வேலையும், தியானமும், மகிழ்சியும் மிகச் சிறந்ததை உள்ளடக்கியிருக்கவேண்டும்.

அநேகர் இப்படிப்பட்ட பழக்கங்களின் பாவத்தன்மையை அறியாதிருக்கிறார்கள். அவர்கள் தெளிவுபடுத்தப்படவேண்டும். கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் சிலர், தாங்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, தங்கள் ஆரோக்கியத்தை அழிப்பதை அறிந்தாலும், தங்களுடைய கெட்ட உணர்ச்சிகளுக்கு அடிமைப் பட்டிருக்கிறார்கள். குற்ற மனசாட்சியை உணருகிறார்கள்; ஆனால் தனி ஜெபத்தில் தேவனை அணுகும் வாஞ்சையை குறைவாகவே கொண்டிருக்கிறார்கள். மதத்தின் படிவத்தை தொடரும்போதே இருதயத்தில் தேவனுடைய கிருபை அற்றவர்களாக இருக்கலாம். அவர்கள் அவருடைய ஊழியத்தில் அர்ப்பணிப்பு இல்லாதவர்களாகி, அவரில் நம்பிக்கை இலலாதவர்களாக, அவருடைய மகிமைக்காக பிழைக்காதவர்களாக, அவருடைய நியமங்களில் மகிழ்ச்சி இல்லாதவர்களாக, அவரில் சந்தோஷப்பட முடியாதவர்களாக இருக்கிறார்கள். முதலாவது பிரதான கற்பனை தேவனிடத்தில் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்புகூறவேண்டும் என்று வேண்டுகிறது. விசேஷமாக, கிறிஸ்தவனாக அறிக்கை செய்பவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிற கீழ்ப்படிதலைக் குறித்த கொள்கையை புரிந்திருக்கவேண்டும்.

தமது கற்பனைகளுக்கு கீழ்ப்படிய மறுத்து, இருதயத்தை தன்னிடமே வைத்து, தோற்றத்திலும் பெயரிலும் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளுவதை தேவன் ஏற்றுக்கொள்வார் என்று யாராவது எதிர்பார்க்க முடியுமா? அவர்கள் சரீர பலத்தையும் அறிவையும் இச்சை என்னும் பீடத்தில் பலிகொடுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், தாங்கள் தவறான வழியில் தொடரும்போதே தேவன் ஏற்றுக்கொள்ளுவார் என்று நினைக்கலாமா?

துப்பாக்கியை தனது சொந்த மார்பிற்கு நேராகக் குறிவைத்து, உடனே தங்கள் வாழ்க்கையை அழித்துப்போடும் தற்கொலை செய்பவர்களைப் போன்றே அவர்கள் இருக்கிறார்கள். மிக பெலவீனப்பட்டவர்களாக, சரீரத்தின் உயிர்சக்தியையும் மனதின் திறன்களையும் படிப்படியாக அழித்து, அதிக காலம் வேதனைப்படுகின்றார்கள் என்றாலும் அழிவு நிச்சயம். ஜீவித்திருக்கும்போது பாவிகளுக்கு இடறலாக இருந்து, மன திடமில்லாத செல்வாக்கினால் பூமியை சபித்து, அழிவின் அடையாளங்களைப் பார்க்கும் நண்பர்களுக்கு தொடர் வேதனையையும் அளவிடமுடியாத கவலையையும் கொடுத்து, கெட்டுப்போன அறிவினால் அனுதின சான்றாக இருக்கிறார்கள்.

ஒருவருடைய உயிரை படிப்படியாக ஆனால் நிச்சயமாக எடுப்பது, பரலோகத்தின் பார்வையில் உடனடியாக கொன்றுவிடுவதைக் காட்டிலும் குறைவான பாவமல்ல. தவறான செய்கையினால் தங்கள்மேல் நிச்சயமான அழிவை கொண்டுவரும் நபர்கள் இங்கேயும் தண்டனையை அனுபவிப்பார்கள்; முழுமையான மனந்திரும்புதலில்லாதபட்சத்தில் இனிவரும் பரலோகத்திற்குள்ளும் அனுமதிக்கப்படமாட்டார்கள். தேவனுடைய சித்தம் செயலுக்கும் விளைவுக்குமிடையே ஒரு உறவை ஸ்தாபிக்கிறது. மிகச் சிறிய அளவு தேவப்பிரமாணத்தை மீறுவதோடுகூடவும் பயங்கரமான விளைவுகள் இணைக்கப்பட்டிருக்கிறது. விளைவை தவிர்க்க அனைவரும் நாடுகிறார்கள். ஆனால் அவ்விளையை உண்டுபண்ணின காரணத்தைத் தவிர்க்க உழைப்பதில்லை. காரணம் தான் தவறாக இருக்கிறது. விளைவு சரியானதே. விளைவை குறித்த அறிவு மீறுபவரை கட்டுப்படுத்தும்படிக்கே இருக்கிறது.

தேவனுடைய சித்தத்தை தங்களது மகிழ்ச்சியாகவும், உச்சகட்ட விருப்பமாகவும் வைக்கிறதினால் பரலோகவாசிகள் பூரணமானவர்களாயு மிருக்கிறார்கள். இங்கே தீங்கு செய்வதை நிறுத்த விருப்பமில்லாதபடியால், அநேகர் தங்களுடைய சௌகரியங்களை அழித்து, ஆரோக்கியத்தை காயப்படுத்தி, நல்மனசாட்சியை மீறுகிறார்கள். சரீரத்தின் செய்கைகளை அதன் ஆசை இச்சைகளோடு அழிக்கும்படி அழைக்கிற உத்தரவு அவர்களிடம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. கிறிஸ்துவை அறிக்கை செய்கிறார்கள்; ஆனால் அவரை பின்பற்றுகிறவர்களல்ல. தங்களுடைய தவறான செய்கைகளை நிறுத்தி, நிதியின் கிரியைகளைச் செய்யும் வரை அவர்கள் அப்படி ஆகவும் முடியாது.

ஆண்களைவிடவும் பெண்களுக்கு உயிர்சக்தி குறைவாகவே இருக்கிறது. அவர்கள் வீட்டுக்குள்ளேயே வாழ்வதால், எழுச்சியூட்டும் காற்றை போதுமான அளவு பெறுவதில்லை. தன்னை தவறாக

உபயோகிப்பதன் விளைவுகள், நீர்கோவை, வீக்கம், தலைவலி, நினைவில் இருத்திக்கொள்ளமுடியாமை, பார்வைக் குறைவு, இடுப்பிலும் பின்புறத்திலும் வலி, முதுகெலும்பு பாதிப்பு, அடிக்கடி தலைக்குள் சிதைவு போன்ற வெவ்வேறு வியாதிகளில் காணப்படுகிறது. வாழ்நாள் பரியந்தம் உடலுக்குள் தூங்கிக்கொண்டிருந்த புற்றுநோய் தூண்டிவிடப்பட்டு, அதன் அழிக்கும் வேலையைத் துவங்குகிறது. மனம் அடிக்கடி நாசப்படுத்தப்பட்டு, பின்நாட்களில் பைத்தியம் பிடிக்கிறது.

தவறான பழக்கங்களை பழகியிருப்பவர்கள் இங்கே தங்களுடைய ஆரோக்கியத்தின் மேலும், இனிவரும் இரட்சிப்பின் மேலும் மதிப்பு வைத்திருப்பார்களானால், அவர்களுக்கான ஒரே நம்பிக்கை அதை விட்டுவிடுவதில்தான் இருக்கிறது. ஒருவேளை இந்தப் பழக்கத்தை அதிக காலம் தொடர்ந்திருப்பார்களானால், சோதனையைத் தடுக்க தீர்மானமான முயற்சியும், தவறான ஈடுபாட்டை மறுப்பதும் அவசியம். தங்களுடைய சொந்த செயல்களினால் தங்களை அழித்துக்கொள்ளுபவர்கள் ஒருபோதும் நித்தியத்தைச் பெறமாட்டார்கள். தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஜீவனையும் ஆரோக்கியத்தையும் தவறாக தொடர்ந்து உபயோகிப்பவர்கள், தேவனுடைய நித்திய இராஜ்யத்தில் அறியாமையையும் ஆரோக்கியமும் கொடுக்கப்படுமானால், அதையும் சரியாக உபயோகிக்கமாட்டார்கள்.

இரகசிய தீய பழக்கம் சரீரத்தின் உயிர்சக்தியை அழிக்கிறது. அது தொடர்பான மன சோர்வை, தேவையற்ற அனைத்து முக்கிய செய்கைகளும் தொடரும். வாலிபர்களிடையே முக்கியமான உறுப்புகளும் மூளையும் இளம் வயதிலேயே மிக அதிகமாக உபயோகிக்கப்பட, குறைபாடுகளும் தளர்வும் உண்டாகிறது. இது சரீரத்தை வெவ்வேறு விதமான வியாதிகளுக்கு திறந்துவைக்கிறது. இவைகளில் மிகப் பொதுவான ஒன்று நுரையீரல் காசநோய். தங்களுடைய உயிர்சக்தியை முழுமையாக உபயோகப்படுத்திய எவரும் உயிர்வாழ முடியாது. அவர்கள் மரிக்கவே வேண்டும். அசுத்தமான ஒவ்வொன்றையும் தேவன் வெறுக்கிறார். தங்களை படிப்படியாக ஆனால் நிச்சயமாக அழித்துவிட ஒப்புக்கொடுக்கிற அனைவர்மேலும் தேவனுடைய முகசுளிப்பு இருக்கிறது.

“நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்”– 1 கொரிந்தியர் 3:16,17.

தங்கள் சொந்த சரீரத்தை கெடுப்பவர்கள், உண்மையிலேயே மனம் வருந்தி முழுமையாக மாறி தேவனுக்குப் பயப்படும் பயத்தோடு பரிசுத்தத்தைப் பூரணப்படுத்தாதபட்சத்தில் தேவதயவை அனுபவிக்க முடியாது. சரீரத்தை தளர்வாக்கி, உயிர்சக்தியை இழந்து, தான் உண்டாக்கப்பட்ட தேவனுடைய சாயலை முழுவதுமாக உடைத்துப் போட்டுக்கொண்டே ஒருவரும் கிறிஸ்தவராக இருக்கமுடியாது. இந்த சன்மார்க்க மாசு நிச்சயமாக அதன் விளைவைக் கொண்டுவரும். காரணம் அதன் விளைவை பிறப்பிக்கவேண்டும். கிறிஸ்துவின் சீடர்களாக தங்களை அறிக்கையிடுகிறவர்கள், தங்கள் சிந்தையிலும் செய்கையிலும் உயர்ந்தவர்களாக நித்தியத்திற்குள் பொருத்தப்படப்போகிறவர்கள் என்பதை எப்போதும் உணர்ந்து, இரட்சிக்கப்படவேண்டுமானால், கறை திறை எதுவுமின்றி இருக்கவேண்டும். அவர்களுடைய கிறிஸ்தவ குணங்கள் கபடற்றதாயிருக்கவேண்டும். இல்லையென்றால் பரிசுத்த பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசுத்தவான்களோடும் அவருடைய நித்திய இராஜ்யத்தின் பாவமற்றவர்களோடும் பிழைக்க, தகுதியற்றவர்கள் என்று கூறப்படுவார்கள்.

வாலிபரின் மனங்களை ஆக்ரமித்து, அவர்கள் நினைவுகளை கெடுத்து, அவர்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டுவது இந்த கடைசி நாட்களில் சாத்தானுடைய விசேஷ வேலையாயிருக்கிறது. இப்படிச் செய்வதின் வழியாக, தங்கள் சரீரத்தை மாசுபடுத்த அவர்களை நடத்தலாம் என்றும், அப்போது அவர்களுடைய மனதின் மேன்மையான திறன்களெல்லாம் தரம்தாழ்ந்துபோகும் என்றும், தன்னுடைய நோக்கத்திற்கேற்ப அவர்களை கட்டுப்படுத்தலாம் என்றும் அவன் அறிந்திருக்கிறான். அனைவரும் சுதந்திரமான முகவர்களாயிருக்கிறோம். இதனால் தங்கள் நினைவுகளை சரியான பதையில் ஓட கொண்டுவரவேண்டும். அவர்களுடைய தியானங்கள் மனதை உயர்த்துகிற தன்மையோடு இயேசுவையும் பரலோகத்தையும் தங்கள் சிந்தைகளின் பொருளாக ஆக்கவேண்டும். மனம் பாதுகாப்பாக செல்லக்கூடிய பரந்த எல்லை இங்கே இருக்கிறது. சாத்தான் மனதை தாழ்ந்த உணர்ச்சித்தொடர்பான காரியங்களுக்கு திசைதிருப்பத்தேடினால் மீண்டும் அதை திருப்பிக்கொண்டுவந்து, நித்தியமானவைகளின்மேல் அதை வையுங்கள். சுத்தமான சிந்தைகளை மாத்திரம் தக்கவைக்க எடுக்கிற தீர்மானமான முயற்சியை தேவன் பார்க்கும்போது, அவர் காந்தத்தைப்போல மனதைக் கவர்ந்து, சிந்தையை சுத்தப்படுத்தி, ஒவ்வொரு இரகசிய பாவத்திலிருந்தும் தங்களை சுத்திகரிக்க உதவுவார். "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும்

கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" 2 கொரிந்தியர் 10:5. மனமாறுகிறவர்கள் செய்யவேண்டிய முதல்பணி, தங்கள் கற்பனையை சுத்தப்படுத்துவதே. தீய திசையில் செல்லும்படி மனம் நடத்தப்படுமானால், சுத்தமும் உன்னததுமான காரியங்களில் திளைக்கும்படி அது கட்டுப்படுத்தப்படவேண்டும். கெட்ட கற்பனைக்கு ஒப்புக்கொடுக்க சோதிக்கப்படும்போது, கிருபையின் ஆசனத்தை நோக்கி ஓடுங்கள். பரலோக பலத்துக்காக ஜெபியுங்கள். சுத்தமான பரலோக காரியங்களில் திளைக்கும்படி மனம் தேவனுடைய பெலத்தில் ஒழுங்குபடுத்தப்படமுடியும்.

உலகத்தின் தீய பழக்கத்தைக் கற்றுக்கொண்ட சில வாலிபர்கள், விசாரித்து அறியும் ஆவர்வமுடையவர்களின் ஆசையைத் தூண்ட முயற்சித்து, அறியாதபட்டத்தில் ஆசீர்வாதமாயிருக்கக்கூடிய இந்த இரகசிய அறிவை அவர்களுக்கும் கொடுக்கிறார்கள். தாங்கள் கற்றுக்கொண்ட தீமையை தாங்கள் மட்டும் பழகிக்கொள்ளுவதில் அவர்கள் திருப்தியடைகிறதில்லை. நல்லப் பழக்கங்களைக் கெடுக்கும்படி, தங்கள் தீய தெடர்பை மற்ற மனங்களுக்கும் அறிவிக்க பிசாசு அவர்களை அவசரப்படுத்துகிறான். வாலிபர்கள் தீர்மானமான மதக் கொள்கைகளை கொண்டிராவிட்டால், அவர்களும் கெடுக்கப்படுவார்கள். மற்றவர்களை தவறாக நடத்தி, மற்றவர்களின் மனங்களை கெடுக்க தங்களை ஊடகமாக உபயோகிக்க சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்த அனைவர்மேலும் கொடிய தண்டனை விழும். ஏதேனில் நம் முதல் பெற்றோர்களை சோதித்து மீறுதலுக்குட்படுத்த சாத்தான் சர்ப்பத்தை ஊடகமாக பயன்படுத்தியதால் கொடிய சாபம் சர்ப்பத்தின்மேல் விழுந்தது. மற்றவர்களை அழிக்கும்படி தங்களைக் கருவிகளாக கொடுக்கிறவர்களை தேவனிடமிருந்து வரும் கொடிய சாபம் பின்தொடரும். தவறாக நடத்தப்பட தங்களை அனுமதித்து தவறான பழக்கங்களைக் கற்றுக்கொள்ளுபவர்கள் தங்கள் பாவத்திற்காக வேதனைப்படுவார்களென்றாலும், அவர்களுக்குப் போதித்த குற்றத்தை சுமப்பவர்கள் தங்கள் பாவத்திற்காகவும் மற்றவர்களைச் செய்யப்பண்ணின பாவங்களுக்காவும் வேதனைப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் பிறவாதிருந்தார்களானல் அது நன்மையாக இருந்திருக்கும்.

தேவனிடமிருந்து வரும் ஞானத்தைப் பெற விரும்புபவர்கள், ஞானிகளாயிருப்பதற்கேதுவாக இந்தக்காலத்தின் பாவ அறிவில் பைத்தியகாரர்களாகவேண்டும். அவர்கள் தீமையைப் பார்த்து கற்றுக்கொள்ளாதிருப்பதற்கேதுவாக தங்கள் கண்களை மூடிக்கொள்ளவேண்டும்; தீமையைக் கேட்டு, தங்களுடைய தூய நினைவுகளையும் செயல்களையும் கறைபடுத்தும் அறிவை பெற்றுக்கொள்ளாதிருப்பதற்கேதுவாக தங்கள் காதுகளை மூடிக்

கொள்ளவேண்டும். கெட்ட வார்த்தைகளைப் பேசி தங்கள் வாயில் கபடமுள்ளவர்களாகாதிருப்பதற்கேதுவாக தங்கள் நாவை காத்துக்கொள்ளவேண்டும்.

இந்த உலகத்தில் கிருபையின் காலத்தில் அனைவரும் தங்கள் செய்கைகளுக்கு கணக்குத்தரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். தங்கள் செய்கைகளைக் கட்டுப்படுத்த அனைவருக்கும் வல்லமை இருக்கிறது. தூய நினைவிலும் செய்கையிலும், உண்மையாயிருப்பதிலும் பெலவீனர்களாயிருந்தால், உதவியற்றவர்களின் நண்பரானவரிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். மனிதத்தன்மையின் அனைத்து பெலவீனங்களுடனும் இயேசு பரிட்சயமாயிருக்கிறார். வேண்டிக் கேட்கும்போது, மிக வல்லமையான சோதனையையும் மேற்கொள்ள அவர் பலம் தருவார். தாழ்மையோடு இந்த பலத்தைத் தேடினால், அனைவரும் பெற்றுகொள்ளலாம். பாரஞ்சுமந்து, பாவத்தைச் சுமந்துகொண்டிருக்கிற அனைவருக்கும் பாவிகளின் நண்பர், “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது” (மத்தேயு 11:28–30) என்ற ஒரு ஆசீர்வாதமான அழைப்பிதழை அளிக்கிறார்.

அறியும் ஆவலை அதிகம் கொண்டவர்களும் கிறிஸ்துவின் பள்ளியில் தங்கள் இன்றைய மற்றும் நித்திய நன்மையைத் தருபவைகளை பாதுகாப்பாக பயிலலாம். அமைதியற்ற மற்றும் திருப்தியடையாதவர்கள் இங்கே இளைப்பை காணலாம். தங்கள் சிந்தைகளும் பற்றும் கிறிஸ்துவில் மையங்கொள்ளும்போது, உலகத்தின் மிக ஐசுவரியமான பொக்கிஷத்தை விடவும் மதிப்புள்ள மெய்யான ஞானத்தைப் பெறுவார்கள்.

அநேக கிறிஸ்தவர்கள் விடாப்பிடியாக உழைப்பதில்லை. மிகக் குறைவான முயற்சியே எடுக்கிறார்கள். சுயததை மறுக்க ஆயத்தமும் மனமும் இல்லாதிருக்கிறார்கள். ஜீவனுள்ள கிறிஸ்தவனின் ஜெபம்: “நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும்”–(கொலோசெயர் 1:9–11) என்பதாக

இருக்கும். “அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது”—கொலோசெயர் 2:3.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாஞ்சித்து அடைந்துகொள்ளவேண்டிய மெய்யான அறிவு இங்கேயிருக்கிறது. இந்த அறிவு பாவத்துக்கு நடத்தாது. தேகக்கட்டை உடைத்துப்போடாது; மனதின்மேல் சோர்வைக் கொண்டுவராது. இந்த ஞானம் தெய்வீகமானது. இது சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிற சுத்தமான ஊற்றிலிருந்து நிற்காது பாயும்.

அநேக கிறிஸ்தவர்கள்கூட இந்த பரலோக அறிவைக்குறித்த உண்மையான வாஞ்சையில்லாதிருக்கிறார்கள். தெய்வீக கிருபையைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியம் கொண்ட இவர்கள் மனதார அறியாமலேயே இருக்கிறார்கள். கெட்டுப்போன அறிவின்மேல் இருக்கும் ஆசையையெல்லாம் நிச்சயமாக அழிக்கும். இந்த விலையேறப்பெற்ற ஞானத்தைத் தேடுவதில்தான் வாலிபரின் பாதுகாப்பு இருக்கிறது. விசுவாசம், பரிசுத்தத்தின் சுத்தமான அமைதியான திருப்தியான சந்தோஷத்தின்மேல் ஒரு விருப்பமான சுவையைப் பெறும்போது, கெடுக்கும் சந்தோஷங்களின்மேல் அவர்கள் அவயவங்களின் உணர்வுகளெல்லாம் அருவருப்பை எழுப்பிவிடும். விரும்பினால் அனைவரும் ஜீவனைத் தெரிந்துகொள்ளலாம். அவர்கள் பாவத்தை எதிர்த்து, நீதியின் வழியிலும் மெய்யான பரிசுத்தத்திலும் இன்பம் கண்டு, தேவனுடைய நித்திய இராஜ்யத்திலே நித்திய ஜீவனை பலனாகப் பெறலாம்.

தங்கள் வழியை கர்த்தருக்கு முன்பாகக் கெடுத்து, தங்கள் சொந்த சரீரத்தை அசுத்தப்படுத்தி, சுயத்தை கொலைசெய்ய தெரிந்துகொள்ள விரும்பினால் அப்படியும் செய்யலாம். ஆனாலும் நியாயசங்கம் உட்காரும் என்பதையும், புத்தகங்கள் திறக்கப்படும் என்பதையும், புத்தகங்களில் எழுதியிருக்கிறபடி தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக தீர்ப்படைவார்கள் என்பதையும் நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். என்ன ஒரு பயப்படக்கூடிய இரகசிய எண்ணங்களையும் தீய செய்கைகளையுங்கொண்ட கறைநிறைந்த குறிப்பு அவர்கள் முன்பு திறக்கப்படும்! அவர்கள் மேல் தீர்ப்பு வழங்கப்படுகிறது. அவர்கள் பக்தியில்லாதவர்களோடு தேவனுடைய நகரத்திற்கு வெளியே அடைக்கப்பட்டு, துன்மார்க்கரோடு பரிதாபமாக அழிகிறார்கள்.

இப்போதே ஆயத்தப்படும் காலம். ஆயத்தப்படுத்தி பொருத்தும் வேலையை தங்கள் முயற்சி இல்லாமல் தேவனே செய்வார் என்று எவரும் நினைக்கவேண்டியதில்லை. பரலோகத்தில் சுத்தமான குறிப்பைக் கொண்டிருப்பதற்கேதுவாக, நீதியின் கிரியைகளைச் செய்து கிருபையின் காலம் முடிவதற்குள் கொடுக்கப்பட்டுள்ள கொஞ்சகாலத்தில் சரியான செய்கைகளைச் செய்துகொள்ளவேண்டியது அவர்களிடம் உள்ளது.

“உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும்” (எசேக்கியேல் 33:11) என்கிற தீர்க்கதரிசியின் கெஞ்சுதலோடு நான் முடிக்கிறேன். ★